2013 ஏப்ரல் 10]

செய்யப்படுகிறது என்பதையும், பட்டு உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் இருக்கும் இந்தியா 17.5 சதவிகிதம் உற்பத்தி செய்கிறது என்பதையும் நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, இந்தியாவினுடைய தேவை 29,000 மெட்ரிக் டன் என்பதையும், உற்பத்தி 23,000 மெட்ரிக் டன் என்பதையும், எஞ்சியுள்ள 6,000 மெட்ரிக் டன் பட்டினை சீனாவிலிருந்துதான் நாம் இறக்குமதி செய்துகொண்டிருக்கிறோம் என்பதையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்ல, சராசரி பட்டுக்கூடு உற்பத்தித் திறனில், இளம் பட்டுப் புழுக்கள் உருவாக்கத்தில் தேசிய அளவில் தமிழகம் முதல் இடத்தில் உள்ளது என்பதனை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாது, வெண்பட்டு உற்பத்தியில் 592 மெட்ரிக் டன் உற்பத்தி செய்து, தேசிய அளவில் தமிழ்நாடு தொடர்ந்து முதல் இடத்தில் இருக்கிறது என்பதனை நான் பணிவன்போடு தெரிவித்து விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 199, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

199—

அங்கன்வாடி மையம்

***22076—திரு. டி.ஆர்.பி. ராஜா:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, காளாச்சேரி ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் எங்கெல்லாம் அங்கன்வாடி மையங்கள் வாடகைக் கட்டடங்களிலும், வாடகை இல்லாத கட்டடங்களிலும் இயங்கி வருகின்றனவோ, அங்கெல்லாம் அங்கான்வாடி மையங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, காளாச்சேரி ஊராட்சியில், காளாச்சேரி, காளாச்சேரி மேலத்தெரு, மேலப்பூவனூர் மற்றும் சோத்தரை (குறு மையம்) ஆகிய 4 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் சோத்தரை அங்கன்வாடி மையம் மட்டும் வாடகைக் கட்டடத்திலும், இதர 3 அங்கன்வாடி மையங்கள் அரசு சொந்தக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. சோத்தரை (குறு மையம்) அங்கன்வாடி மையம் 2007 ஆம் ஆண்டு முதல் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழ் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 200, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

200—

கல்வியியல் கல்லூரி

***3941—திரு. அ. பாஸ்கர்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியில் ஆசிரியர் கல்வியியல் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,